(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 407.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 நவெம்பர் 01, சனிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3400/ '13

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் இரவு நேர மோட்டார் கார் ஓட்டப் போட்டி என்னும் எண்ணக்கரு எப்போது தோன்றியது என்பதை அவர் கூறுவாரா?

(ஆ) 2011 மற்றும் 2012 இல் கொழும்பில் நடைபெற்ற இரவு நேரப் போட்டிகள் தொடர்பான பின்வரும் விடயங்களைத் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(i) பிரதான ஒழுங்கமைப்பு தரப்பு;

(ii) போட்டிகள் நடைபெற்ற திகதிகள்;

(iii) ஒரு போட்டிக்கான மொத்தச் செலவு;

(iv) பொதுமக்கள் பெற்றுக்கொண்ட நன்மைகள்;

(v) ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் சம்பாதித்த அந்நியச் செலாவணி;

(vi) அரசாங்கத்தினால் கொழும்பு மாநகர சபைக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை;

(vii) பொதுமக்களுக்கு ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டதா;

(viii) ஏதாவது விபத்துக்கள் அல்லது காயமடைதல்கள் அறிக்கை செய்யப்பட்டனவா;

(ix) அவ்வாறெனில் காயமடைந்தவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பின் தன்மை மற்றும் அவர்களுக்கு எவ்வகையான நட்டஈடு வழங்கப்பட்டது

(இ) (i) எதிர்காலத்திலும் இரவு நேர போட்டிகள் நடைபெறுமா என்பதையும்;

(ii) இது நாட்டின் ஒரு முன்னுரிமை விடயம் என்றால், இந்த இரவு நேரப் போட்டிகளுக்குச் செலவிடப்படுகின்ற பணத்தை நாட்டின் ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவது சாத்தியப்படாது என்பதையும்

அவர் மேலும் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4090/ '13

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தென்மாகாண சபையின் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்க பாடசாலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றதென்பதை அறிவாரா;

(ii) மதிய உணவு வழங்குவதற்காக பாடசாலைகளைத் தெரிவுசெய்யப் பயன்படுத்திய அளவுகோல்கள் யாது;

(iii) பாடசாலை மதிய உணவுக்காகப் பயன்படுத்துகின்ற உணவுப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள விதம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாடசாலை மதிய உணவு வழங்குகின்ற வழங்குனர்களுக்கு கடந்த பல மாதகாலமாக பணம் கிடைக்காமையால் அவர்கள் கடும் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ளார்களென்பதை அறிவாரா;

(ii) அப்பணம் செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) மதிய உணவு வழங்குனர்களுக்கு துரிதமாக பணம் செலுத்த நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5086/ '14

3.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவுக்குரிய பழையகாமம், முரசு மோட்டை, சேற்றுக் கண்டி முதலாம் கட்டம் மற்றும் அய்யன் கோவிலடி ஆகிய பிரதேசங்களில் சுமார் 300 குடும்பங்கள் வாழ்கின்றனர் என்பதையும்;

(ii) இம்மக்களை மீளக் குடியமர்த்தி 4 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள போதிலும் இற்றைவரை இப்பிரதேசங்களில் எதுவித அபிவிருத்தியும் செய்யப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அய்யன் கோவிலடி கிராமத்துக்குப் பிரவேசிக்கும் வீதியிலுள்ள மரப்பாலம் தற்போது ஆபத்தான நிலையிலுள்ளதால் அதனை மறுசீரமைப்பதற்கும்;

(ii) இதுவரை மின்சாரம் வழங்கப்படாத இக்கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கும்

நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5097/ '14

4.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தயட்ட கிருள 2014 கண்காட்சிக்கு இணைந்ததாக வடமேல் மாகாணத்தில் விருத்தி செய்யப்பட்ட சிறு நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கண்காட்சிக்கு இணைந்ததாக புதிதாக உருவாக்கப்பட்ட நீர்ப்பாசன கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் செலவிடப்பட்ட பணத்தொகைகள் எவ்வளவென்பதையும்

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5147/ '14

5.

கௌரவ துனேஷ் கன்கந்த,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தேசிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவர்களில் விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவருக்கும் விடுதி வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மகிந்த சிந்தனையின் மூலமும் 2010ஆம் ஆண்டில் மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கின் மூலமும் வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(iv) மேற்படி வாக்குறுதியை யதார்த்தமாக மாற்றுவதற்காக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை யாது;

(v) ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவருக்கும் விடுதி வசதிகளை வழங்கும் நோக்கத்தை அடைவதற்காக மேற்படி நடவடிக்கை போதுமானதல்ல என்பதை அறிவாரா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிக்கமைய விடுதிகள் கிடைக்காத மாணவர்களுக்கு அந்த வசதிகளை வழங்கும்வரை குறைந்த பட்சம் ரூபா இரண்டாயிரம் (ரூபா 2000/=) மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5181/ '14

6.

கௌரவ  நலின் பண்டார ஜயமஹ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில்,

(i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் அனுசரணை அறிவித்தல்கள், வாழ்த்துரை பலகைகள் மற்றும் விளம்பரப் பலகைகளை பொருத்துவதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

(ii) மேற்படி நிறுவனங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு பொருத்தப்பட்ட பலகைகளுக்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

(ii) மேற்படி நிறுவனங்களின் நோக்கங்களுக்கு புறம்பான நோக்கங்களுக்காக பொருத்தப்பட்ட பலகைகளுக்கு செலவிடப்பட்ட பணத் தொகை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்களின் நோக்கங்களுக்கு புறம்பான நோக்கங்களுக்காக பொருத்தப்பட்ட விளம்பரப் பலகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பலகைகளை பொருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியவர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கான செலவு மீளளிப்புச் செய்யப்பட்ட விதம் யாதென்பதையும்;

iv) மேற்படி பலகைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையதான ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5193/ '14

7.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிபிட்டிய கடுதாசி தொழிற்சாலை தற்போது அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு நிறுவனமா என்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் ஒரு பகுதி அரசுக்கு சொந்தமானதெனின், அதன் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலை தற்போது வெளிநாட்டு முதலீடொன்றின் ஊடாக தனியார்மயப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாயின், அந்த முதலீட்டாளர்கள் அதற்கான நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொண்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி முதலீட்டாளரின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி முதலீட்டாளர் உள்நாட்டு வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடனொன்றின் மூலம் மேற்படி முதலீட்டுக்கு ஏற்புடையதான பணத்தை ஈடுசெய்து கொண்டுள்ளதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கடுதாசித் தொழிற்சாலையில் பணத்தை முதலீடு செய்துள்ள கம்பனியொன்று உள்ளதாயின், மேற்படி முதலீடு தொடர்பில் குறிப்பிட்ட கம்பனி மேலும் அரசுக்கு செலுத்தவேண்டியுள்ள ஏதேனும் பணத்தொகை உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5271/ '14

8.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாவனெல்ல, மஹவத்த, தனாகம வீதி, இலக்கம் 4சீ/12இல் வசிக்கும் திருமதி எம். எல். பாத்திமா றிசானாவின் கணவரான, திரு. அகம்மது லெப்பை அசீஸ் (இலங்கை கடவுச் சீட்டு இலக்கம் N0628701 ) சவுதி அரோபியாவின் றியாத் நகரில் 2012.07.09 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரிழந்த திரு. அசீஸ் சார்பில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையில் 00884/2013 ஆம் இலக்கத்தின் கீழ் காப்புறுதி இழப்பீட்டு விண்ணப்பப் பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களும், சத்தியக் கடதாசியும் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், இது வரை குறித்த காப்புறுதி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) குறித்த இழப்பீட்டுத் தொகையை திரு. அசீஸின் மனைவிக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5417/ '14

9.

கௌரவ அஜித் குமார,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்துராஜவெல சரணாலயத்தின் மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சரணாலயத்தில் காணப்படும் தனித்துவமான உயிர் இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உயிரினங்களில் ஓரிட வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை முதலீட்டுச் சபை முத்துராஜவெல சரணாலயத்திற்கு சொந்தமான பிரதேசத்திலிருந்து 150 ஏக்கர் நிலத்தை பெற்றுக்கொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதா என்பதையும்;

(ii) தற்சமயம் குறிப்பிட்ட 150 ஏக்கர் ஏதேனுமொரு நிறுவனத்திற்கு கையளிக்கப்படவுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனம் குறிப்பிட்ட நிலப்பரப்பில் மேற்கொள்ளவுள்ள கருத்திட்டம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் ஏற்படும் சுற்றாடல் சேதம் யாதென்பதையும்;

(v) குறிப்பிட்ட சுற்றாடல் சேத்தின் காரணமாக உருவாகின்ற பிரச்சினைகளுக்கு வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3438/ '13

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாறு நடவடிக்கையிலுள்ள அனைத்து நேரடி மற்றும் மறைமுக வரிகள் எவை என்பதையும்;

(ii) இன்றுள்ளவாறு வரி பயன்படுத்தப்படும் வீதங்களின் தாக்கத்தின் ரூபா பெறுமானத்தையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரிசி, சீனி, பருப்பு, பால்மா, கோதுமை மா, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், தகரத்திலடைக்கப்படட மீன், வெங்காயம், மின்சாரம், வங்கிக் கடன், போன்றவற்றுக்கு இன்றுள்ளவாறு வதிக்கப்படும் வரியின் அளவுகளையும்;

(ii) 2004 ஏப்பிறல் 2, 2005 திசெம்பர் 01, 2009 திசெம்பர் 01 மற்றும் 2013 சனவரி 01 ஆகிய திகதிகளில் உள்ளவாறு அந்த அளவுகளின் ஒப்பீடு ஒன்றையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றுள்ளவாறாக வரி பயன்படுத்தப்படும் வீதங்களின் தாக்கத்தின் வளப் பெறுமதியினை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4282/ '13

11.

கௌரவ புத்திக பதிரண,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிகம பிரதேச செயலாளர் பிரிவின் நிவிதிவெல்பொக்க கிராம அலுவலர் பிரிவிலுள்ள மஹஹேன கிராமத்தில் திருமதி. எச். எம். பிரேமாவதிக்குச் சொந்தமான 891ஆம் இலக்க காணித் துண்டில் காணப்பட்ட ஏறத்தாழ நூறு ஆண்டுகள் பழைமைவாய்ந்த பொதுக் கிணற்றை குறித்த பெண்மணி மூடியுள்ளார் என்பதையும்;

(ii) குறித்த கிணறு மூடப்பட்டதால் தோன்றிய பிணக்கு, நிவிதிவெல்பொக்க கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட பொய்யான தகவல்கள் காரணமாக தீர்க்கப்பட முடியாதுள்ளதென்பதையும்;

(iii) திருமதி. யூ. ஜீ. அனோமா காந்தி உள்ளிட்ட கிராமவாசிகள் சிலர் பொதுக் கிணறு மூடப்பட்டுள்ளமை தொடர்பாக தலையீடு செய்யுமாறு, 2011ஆம் ஆண்டு யூன் மாதம் மாத்தறை மாவட்டச் செயலாளருக்கு எழுத்துமூலம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர் என்பதையும்;

(iv) இவ்விடயம் தொடர்பாக தென் மாகாண காணி ஆணையாளர் ඉකො මා/වැපි/පොදු 2011ஆம் இலக்க மற்றும் 2011.08.03 ஆம் திகதிய கடிதம் மூலம் வெலிபிட்டிய பிரதேச செயலாளரின் அவதானிப்புகளும் சிபாரிசுகளும் அடங்கிய அறிக்கையொன்றினை கோரியுள்ளார் என்பதையும்;

(v) 2011.09.13ஆம் திகதி பிணக்குடன் தொடர்புடைய நபர்கள் அழைக்கப்பட்டு தல விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ள விசாரணையின் பெறுபேறுகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கிணற்றை மீண்டும் பொதுப் பாவனைக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் கிணறு அமைந்துள்ள காணியை அரசாங்கத்திற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5098/ '14

12.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எள்ளு விவசாயிகள் எள்ளு விளைச்சலை பதனிடுகின்றபோது பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகம்கொடுக்கிறார்கள் என்பதை அறிவாரா;

(ii) கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இந்நாட்டின் எள்ளு உற்பத்தி யாது;

(iii) குறித்த காலப் பகுதியினுள் ஏற்றுமதி செய்யப்பட்ட எள்ளின் அளவும் அதன் பெறுமதியும் யாது;

(iv) எள்ளு விளைச்சலை அதிகரிக்கச் செய்வதற்காக உள்நாட்டில் எள்ளு விதைகளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(v) எள்ளு விளைச்சலை பதனிடும் பொருட்டு நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்துகின்ற முறையியல்கள் இனம் காணப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ சில்வேஸ்திரி அலன்ரின்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சந்திரகுமார் சமூகமேம்பாட்டு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட ஏழாவது நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஒற்றோபர் 24) [1].

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 15.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 17.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 18.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 19.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 20.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 21.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 22.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.